Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம்10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (3-9-65) இதழ் 203

விசுவாவசு ஆவணி 18 ஜ: அவ் பிறை 6 வெள்ளிக்கிழமை

நீடித்த பாவனைக்கு

சொனென்ஷீன் சொனென்ஷீன்



பற்றறிகளையே உபயோகியுங்கள்

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:

துரை அன் கோ

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## பொலிஸ் விசாரணைக் கமிஷன்

பம்பலப்பிட்டி, வியாழன் பொலிஸ் இலாகா பற்றித் தெரிவிக்கப்பட்ட புகார்கள் குறித்தும் பொலிஸ் உத்தியோகஸ்தர்களது குறைபாடுகள் குறித்தும் ஒரு விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படவிருப்பதாக பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா நேற்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் தெரிவித்துள்ளார்.

# காஷ்மீரில்பாகிஸ்தான் 5 மைல் ஊடுருவல்

## விளக்கம் தருமாறு மூதூர் எம். பி. கோரப்பட்டுள்ளார்

திருக்கோணமலை, வியாழன்

தேசிய அரசாங்கம் ஏற்பட்ட காலத்தில் இருந்து கட்சிக் கொள்கைகளுக்கும் தீர்மானங்களுக்கும் முரணான வகையில் தனிப்பட்ட முறையிலும் பொதுக்கூட்டங்களிலும் பேசி வருவது குறித்து தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், மூதூர் முதலாவது பிரதிநிதி ஜனாப் எம். எ. எச். முகமதலியிடம் விளக்கங் கோரிக்கடிதம் எழுதியிருப்பதாக நம்பகமான வட்டாரங்களில் இருந்துதெரிய வருகின்றது.

தமிழரசுக்கட்சித் தீர்மானங்கள் சிலவற்றை தவறானது என்றும் கட்சி நடவடிக்கைகளுக்கு மாறாக மூதூர் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சிக் கிளைகளை நிறுவுவதிலும் ஜனாப் முகமதலி ஈடுபட்டுள்ளதாவும் இது குறித்து அவர் மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தமிழரசுத் தலைமைப்பீடத்திற்கு மூதூர்தொகுதி தமிழரசுப் பிரமுகர்கள் செய்த முறையீட்டைத் தொடர்ந்தே திரு. செல்வநாயகம் மேற்கண்ட விளக்கத்தைக் கோரியிருக்கின்றாராம்.

ஜனாப் முகமதலி இது குறித்து திரு. செல்வநாயகத்திற்கு அனுப்பிய பதிலில் விளக்கங் கொடுக்கக் கூடிய சூழ்நிலையில் தான் இப்பொழுது இருக்கவில்லையென்றும் இதுவிஷயமாக மேலும் தன்னை விளக்கங் கோர வேண்டாமென்றும் காலம்வரும்போது விளக்கங் கொடுக்கப்படுமென்றும் கூறியுள்ளதாகத் தெரியவருகிறது.

திரு. செல்வநாயகம் விளக்கங் கோரியனுப்பிய கடிதமும் அதற்கு ஜனாப் முகமதலி அனுப்பிய பதிலும் தமிழரசுக்கட்சியின் அடுத்த மத்திய கமிட்டிக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப் படலாமென்று தமிழரசுப் பிரமுகர் ஒருவர் நமது 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்தார்.

## 13 டாங்கிகள் அழிக்கப்பட்டதாய் இந்தியா அறிவிப்பு

### தகுந்த எதிர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாம்

புதுடில்லி, செப். 2

**காஷ்மீர் சாம் பகுதியில் பாகிஸ்தானியர் டாங்கிகளை உபயோகித்திருப்பதால் சண்டை விரைவாகப் பரவியிருக்கிறது என இந்தியப் பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் லோகசபையில் கூறினர்.**

**டாங்கிகளை உபயோகித்ததால்தான் இந்தியா விமானப்படையை உபயோகிக்க வேண்டியிருந்ததாய் பிரதமர் சாஸ்திரி அதற்குப்பின் தெரிவித்தார்.**

காஷ்மீரின் ராணுவக் கொள்கை முழுதும் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்றும் திரு. சாஸ்திரி கூறினார்.

இதற்கிடையில் நாட்டில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் காஷ்மீர் பிரச்னையில் பிரதமர் சாஸ்திரியுடன் ஒன்றுபட்டு அவரை ஆதரித்து நிற்பதாக வாக்களித்திருக்கிறார்கள்.

சாம் பகுதியில் பாகிஸ்தான்டாங்கிகளுடன்நுழைந்ததால் சண்டைவிரைவாகப் பரவியிருக்கிறதென்றும், ஆனால் நிலைமை கட்டுக்கடங்கியிருக்கிறதென்றும், தகுந்த எதிர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதென்றும் பாதுகாப்பு மந்திரி பார்லிமெண்டில் கூறினார்.

நேற்றுக்காலை பாகிஸ்தானிய பிரிகேட் ஒன்று சண்டையைத் துவக்கியதாயும், அதற்குமுன் அது பீரங்கித் தாக்குதல்கள் நடத்தியதாயும், பாகிஸ்தானியர் 5 மைல் ஊடுருவியிருப்பதாயும் திரு. சாஸ்திரி தெரிவித்தார்.

இத்தாக்குதலில்13 டாங்கிகளை இந்திய விமானப் படையும், தரைப்படையும் ஒன்றுசேர்ந்து அழித்ததாக அவர் கூறினார்.

இரு பகுதியிலும் ஆட்சேதம் எவ்வளவு என்பது தெரியவில்லை. பாகிஸ்தான் நடவடிக்கைக்கு தகுந்த எதிர் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது' என்றும் சாஸ்திரி தெரிவித்தார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## 'தேசபக்தியே அற்புத சாதனைக்கு வித்திட்டது'

### யாழ்ப்பாணத்தில் இஸ்ரேல் தூதர்

யாழ்ப்பாணம், வெள்ளி

''மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்ச்சியும், தேசபக்தியும்தான் இஸ்ரேல் நாட்டு விவசாயத் துறையில் அற்புத சாதனையை ஏற்படுத்தியது'' என்று இஸ்ரேல் நாட்டுத் தூதுவர் திரு. ஜீ. ஷாஉல் றமாதி, நேற்றுமுன்தினம் மாலை யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

வடபகுதி அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. றமாதி இஸ்ரேல்நாட்டு விவசாயத்துறையின் சாதனைகள்பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

திரு. றமாதி மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது;-

''நமது நாட்டின் விவசாயத்துறை முன்னேற்றத்துக்குப் பல காரணங்கள் உண்டு. நவீன தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்தி, விஞ்ஞானரீதியாக விவசாயத்தை மக்கள் செய்தனர். இவைகள் எல்லாவற்றையும்விட எங்கள் நாட்டு மக்கள் மத்தியில் விவசாயம் செய்பவர்கள் பற்றி ஒரு கேவலமான, கூடாத எண்ணம் ஏற்படவில்லை. விவசாயம் செய்பவர்கள் அறிவிலும், நாகரீகத்திலும் முன்னேறியவர்களாகவே இருந்தார்கள். இந்த ஒரு முக்கிய காரணத்தினுல் விவசாயத்துறையில் எமது நாடு முன்னேக்கியது.

உலகஅரங்கில், மனிதாபிமானமற்றமுறையில் எமது மக்கள் அனுபவித்துவந்த கொடுமைகளும், கஷ்டங்களும் சொல்லிலடங்காது. ஆனுலும் எப்படியோ போராடி விடுதலைபெற்ற எம்மவர்கள் மத்தியில் ஓர் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது, காடாகவும், மலைகளாகவும், பள்ளத்தாக்குகளாகமிருந்த நிலங்களை இரவு பகலெனப் பாராது நெற்றிவேர்வை நிலத்தில் சிந்த உழைத்து சீராக்கினர்கள்.

எமது நாட்டின் தொழிலை ஆட்சி செய்வோமென்று கோஷமிட்டு தொழில்மீது அபிமானத்தை ஏற்படுத்தியவர்கள் நம்நாட்டுக் கல்விமான்கள். எமது நாட்டின் தொழில்வளம்

(2-ம் பக்கம் பார்க்க)

## கிருஷ்ண விக்ரகம் கண்டெடுக்கப் பட்டது

யாழ்ப்பாணம், வெள்ளி

வல்வெட்டி மாடந்தைப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையிலுள்ள குடில் ஒன்றை அகற்றும்போது நிலத்திலிருந்து ஒரு சிறிதளவு ஆழத்தில் ஒரு கிருஷ்ண விக்கிரகத்தை நாக பாம்பு சுற்றிக் காண்டிருப்பதை இக்குடிலை அகற்றியவர்கள் கண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அற்புதக் காட்சியை நூற்றுக்கணக்கான மக்கள் பல பகுதிகளிலிருந்தும் வந்து பார்த்துச் செல்கிறார்களாம்.

வேறு ஏதோ தேவைக்காக குடிலை அகற்ற எண்ணியவர்கள், தெய்வீகத் தன்மை வாய்ந்த அவ்விடத்தில் கிருஷ்ணர் ஆலயத்தைக் கட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார்களென அறியப்படுகிறது.

## 'சென்ற வருடத்தில் விசாவரி செலுத்தியவர் எத்தனை பேர்?'

### கெனமன் கேட்பார்

பம்பலப்பிட்டி, வியா.

''1964-ம்வருடத்தில் தற்காலிக விசாவரி கொடுத்தவர்கள் எத்தனைபேர்' என கம்யூனிஸ்ட்கட்சி அங்கத்தவர் திரு. பீட்டர்கெனமன் ஜனப்பிரதிநிதிகள் சபையில் நிதியமைச்சரைக் கேட்கவிருக்கிறார்.

திரு. கெனமன் நிதி அமைச்சரைக் கேட்கவிருக்கும் இதுசம்பந்தப்பட்ட உபகேள்விகள் வருமாறு:

விசாவரி கொடுத்தவர்களுள் (அ) பிரிட்டிஷ் பிரஜைகள், (ஆ) இந்தியப் பிரஜைகள், (இ) பாகிஸ்தானியப்பிரஜைகள், (ஈ) அமெரிக்க பிரஜைகள், (உ) ஏனைய நாடுகளின் பிரஜைகள் ஆகியோர் எத்தனை பேர்?

இலங்கையிலுள்ள அத்தகையோர் அனைவரினதும் பெயர்கள், முகவரிகள், நாட்டினம், தொழில்கள் ஆகிய விபரங்களைக் கொண்ட விபரமொன்றை நிதிஅமைச்சர் சமர்ப்பிப்பாரா?

அவ்விதமில்லாவிடில் சமர்ப்பிக்காததற்கான காரணம் என்ன?

## 'ஈழநாடு'

(ஞாயிறு பதிப்பு 5-9-1965)

○ ஒளியைத்தேடி (சிறுகதை) —''மலையமான்''

○ இலக்கிய யாத்திரை (உரைநடைச்சித்திரம்) —'காங்கேசன்''

○ சைவந் தழைக்க வந்த ''சிவமணி'' சேர் கந்தையா வைத்தியநாதன் —வை. முத்துக் குமாரகவாமி பி. ஏ.

○ கவிதை ஒப்பனை (ஒரு கண்ணேட்டம்) - வை. அ. கைலாசநாதன்

○ உலகமேடை, இலங்கையில் ஒலிபரப்புசேவை, தித்திப்பு, சிறுவர் பூங்கா, பட்டிமன்றம் முதலிய பல்வேறு அம்சங்களுடன்

11-9-65 பாரதியார்தினத்தை முன்னிட்டு வெளிவருகின்றது. உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

யுத்தத்தினுல் எல்லாப் பிரச்னையையும் தீர்க்க முடியாது. ஏற்கனவே உள்ள பிரச்னைகளை யுத்தம் அதிகப்படுத்தவேசெய்யும். —ஜவஹர்லால் நேரு.

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆவணிமீ 18 உ (3-9-65)

# பொலிஸ் கமிஷன்

பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் குறைபாடுகளையும், அவர்கள்மேல் பொதுமக்கள் அடிக்கடி கூறும் குற்றச்சாட்டுகளையும் பற்றி விரிவாக ஆராயப் பொலிஸ் கமிஷன் ஒன்றை நியமிக்கப் பிரதமர் முன்வந்திருப்பதை வரவேற்கிறேம்.

சுதந்திர ஜனநாயக ஆட்சி நிலவும் பிரிட்டன் போன்ற நாடுகளில், பொலிஸார், பொதுமக்களுடன் சிநேக முறையில் உதவிபுரிவதும், அவர்களைப் பாதுகாப்பதும், மக்களின் உடைமைகளையும், பொருட்களையும் அபகரிக்கும் குற்றவாளிகளைச் சட்டமுறையில் தண்டனைக்குக் கொண்டு வருவதும், அனைவரும் மெச்சக்கூடிய சிறந்த முறையில் நடந்து வருவதும் பலர் அறிந்த உண்மைகளாகும்.

ஆனல் இந்நாட்டில் பொலிஸார் - பொதுமக்கள் உறவு அந்த நிலையில் இல்லையென்பதை வருத்தத்துடன் குறிப்பிட வேண்டும். குற்றவாளிகளை மட்டுமின்றி, பொதுமக்களையும் அவர்கள் துன்புறுத்துகிருர்கள் என்ற புகார் பலமுறை பகிரங்கமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பொதுமக்களுடன் சௌஜன்யம், மரியாதை ஆகிய குணங்களுடன் உறவாடும் பழக்கம் அவர்களுக்கு இன்னும் வரவில்லை என்றும், பேச்சில் கடுமையும், கொடிய முறைகளுமே அவர்களுக்குச் சகஜமாயுள்ள பழக்கம் என்றும் பல கருத்துகள் தெரிவிக்கப்படுகின்றன. இவை தவிரப் பல லஞ்ச ஊழல்கள் பற்றியும் குறை கூறப்படுகின்றன. இவற்றுக்கான காரணங்களை ஆராய்வதில் உத்தேச கமிஷன் உதவியாயிடுக்குமென எதிர்பார்க்கலாம்.

அதேசமயம் உத்தியோகஸ்தர்கள் என்ற முறையில் பொலிஸார் திருப்திகரமாக வாழக்கூடிய சம்பளம், வீட்டு வசதி, இதர பல வசதிகளுக்கு அரசாங்கம் சரியான முறையில் வழி வகுக்கவில்லை என்பதையும் குறிப்பிடவேண்டும். குறிப்பாகக் கீழ்மட்டத்திலுள்ள கான்ஸ்டபிள்களுக்குச் சம்பளமும், இதர வசதிகளும் திருப்திகரமாய் இல்லை. பொலிஸ் சேவை இப்போது ஒரு அத்தியாவசிய சேவை என்பதை மறக்கக் கூடாது. முதலாவதாக இச்சேவைக்கு ஆட்களைத் திரட்டும் விஷயத்தில், கல்வி, ஒழுக்கம் ஆகிய தகுதிகளைக் கவனித்தே தேர்ந்து எடுக்கப்பட வேண்டும். இப்படிப்பட்டவர்களுக்குச் சம்பளம், இதர அத்தியாவசிய தேவைகளை நல்ல முறையில் அளிக்க முயற்சிப்பது அரசாங்கத்தின் கடமை.

இந்த விஷயங்களை எல்லாம் தகுதிபெற்ற பொலிஸ் கமிஷன் விரிவாகஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதைத் தொடர்ந்து, விரைவில் அதன் சிபார்சுகளைஅமுல்நடத்த அரசாங்கம் ஆவனசெய்ய வேண்டியது அவசரமும், அவசியமும் ஆகும்.

## "சிலை அமைக்க வேண்டும்"

கோண்டாவில், வியாழன் ''இலங்கை வாழ் இந்து மக்கள் திருக்கேதீஸ்வரத்தானை நினைக்கும் பொழுதெல்லாம் தன்னையும் நினைக்கும்படியாக அரும்பணி ஆற்றிவிட்டு எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்த சைவப் பெரியார் சேர் கந்தையா வைத்தியநாதனுக்கு நாம் செய்யும் பணி அவர் விட்டுச் சென்ற பணியைப் பூர்த்தியாக்குவதே''.

இணுவில் சனசமூகநிலைய மண்டபத்தில் சைவத் திருநெறிக் கழக ஆதரவில் நடைபெற்ற திரு. வைத்தியநாதனின் மறைவு குறித்து நிகழ்ந்த அனுதாபக்கூட்டத்தில் வலி. வடக்கு கிராமமுன்னேற்றச் சங்கங்களின் சமாசச் செயலாளர் திரு. சி. சண்முகலிங்கம் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், எமது வருங்காலச் சந்ததியினர் பெரியார் சேர் வைத்தியநாதனது தன்னலமற்ற சேவையை அறியும் பொழுது அவரது உருவத்தை அவர்கள் காண முடியாது என்றும் எனவே அவர்கள் அவரது சிலையையாவது கண்டு தரிசிக்க திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபைக்கு இந்துக்களாகிய நாம் ஆதரவு கொடுத்து திருப்பணியைப் பூர்த்தியாக்குவதுடன் கோவிலுக்கு அண்மையில் அவரது சிலையையும் நிறுவ ஆவன செய்யவேண்டும் என்றும் வண்டுகோள் விடுத்தார்.

மற்றும் தமிழ் மன்றத் தலைவர் திரு. கே, எஸ். ஆனந்தன், திரு. வ. லோகநாதன், திரு. சி. நடராசா, திரு. ஐ. அருளானந்தன், திரு. ந. சுந்தரலிங்கம் ஆகியோரும் பேசினர்.

## மீனவர்களுக்கு சலுகை

முல்லைத்தீவு, வெள்ளி

அம்பாந்தோட்டைத் துறையில் எழுந்த மீன்பிடித் தகராற்றை இளைப்பாறிய மாவட்ட நீதிபதி எவ். ஸி. பெரேரா விசாரணை செய்து கைத்தொழில் கடற்றெழில் மந்திரிக்குச் சமர்ப்பித்த அறிக்கை ஒன்றில் அப்பகுதி மீனவர்கள் இதுவரை காலமும் பதிவு செய்த வலைகளின் தொகையைஅதிகரிக்கும்படி சிபார்சு செய்திருக்கிருர். மேற்படி விசாரணை அம்பாந்தோட்டை பொதுப்பணியாளர் பொழுதுபோக்குக் கரிளயில் கடந்த ஜனவரி மாதம் ஆரம்பமாகியது. இவ்விசாரணையின் போது விசாரணைக்குழுவின் செயலாளராக மீன்பிடி இலாகாவைச் சேர்ந்த திரு. ஏ. சிவதாசன் பணியாற்றினர்.

# புதுமையும் புரட்சியும் காணத்துடித்தவர் கந்தையா

## இன்று அவரது ஞாபகார்த்ததினம்

— பாமா —

தனக்காக வாழாமல் நாட்டுக்காக வாழ்ந்து மடிந்த மேதை பொன். கந்தையா மறைந்த தினமான இன்று அவரைப்பற்றி நினைவுகூருவது பலவழிகளில் நன்மை பயக்கும்.

பொன். கந்தையா 1956 முதல் பருத்தித்துறைத் தொகுதிபாராளுமன்றபிரதிநிதியாக இருந்து பலஆண்டு காலம் பொதுவாக இலங்கை மக்களுக்கும், சிறப்பாக தமிழ மக்களுக்கும் பெருந் தொண்டாற்றினுர். கரவெட்டியில் மூத்தநயினுர் கோயில் அருகில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் பயின்று வகுப்பறையிலேயே புதுமையும் புரட்சியும் காணத் துடித்தார் வாலிபர் கந்தையா. ''நான் வறியவனுகப் பிறந்தேன். எனவேதான் வறுமையை ஒழிக்கும் வைராக்கியம் என் மனதில் பிறந்தது'' என்று தனது இருதய நோயைக் கூடப் பொருட்படுத்தாது பொன், கந்தையா உறுதியுடன் கர்ஜித்ததுண்டு.

பல்கலைக்கழகம் சென்று பட்டங்களும் பதக்கங்களும் பல பெற்று இங்கிலாந்து சென்று ஆங்கிலமொழியில் வல்லுனராகி கல்விமான்களில் சிறந்தவராக விளங்கினுர். இவரது அரசியல் எதிரிகள்கூட இவரின் அறிவையும், பொருளாதாரப் பிரச்னைகள் பற்றிய பல ஆழ்ந்த கருத்துக்களையும் மதித்துக் கேட்பதுண்டு.

பாராளுமன்றத்தில் இவர் நிகழ்த்திய வரவுசெலவுத் திட்டப் பேச்சுக்கள்பற்றி அவ்வப்போது இலங்கையிலிருந்து வெளிவந்த தேசிய பத்திரிகைகள் தலையங்கம் தீட்டின.

கொழும்பு பொது நூல் நிலையத்தை புனர்நிர்மாணம் செய்வதற்கு காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவால் திரு. கந்தையா தனி நபர் 'கமிஷ'ஞக நியமிக்கப்பட்டார். அவர் சமர்ப்பித்த அறிக்கை இவருடைய நூல் நிலைய அறிவையும், வைபவத்தையும் மாத்திரமன்றி இந்தநாட்டின் கலாச்சார வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் வகையில் பெரும் பணியை அறிக்கை வடிவில் செய்தார் என்பதையும்காட்டுகிறது.

பல்கலைக்கழகப் பேராசிரியரான பொன். கந்தையா பாட்டாளிகளின் கூட்டாளியாகவிருந்து சோஷலிஸச் சித்தாந்தத்தையும் சமூக அமைப்பில் தேவையான அம்சங்கள்பற்றியும் நன்கு விளக்கிவந்தார்.

''நான் அனுபவித்த வறுமையை எனது நாட்டவர்கள், உடன்பிறந்தவர்கள் அனுபவிக்கக்கூடாது என்ற ஒரே நோக்கம்தான் என்னை சோஷலிஸ் அமைப்பைப்பற்றிச் சிந்திக்கத் தூண்டியது'' என்று அடிக்கடி கூறிக்கொள்ளும் திரு. பொன். கந்தையா மறைந்தும் மறையாத மேதையாகத் திகழ்கிருர்.

## தேசபக்தியே . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

த்து வளர்ந்ததற்கு காரணம் இவர்கள்தான்.

இஸ்ரேல் நாட்டில் மக்களிடையே ஏற்றத்தாழ்வு கிடையாது. சகோதரத்துவம், சமத்துவம் இவைதான் நமது கொள்கை. இதன் அடிப்படையில்தான் நாம் இயங்கிக்கொண்டிருப்பதால் நமது நாடு நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டேயிருக்கிறது,

எமது நாட்டின் தேவைகளில் 75 வீதத்தை நமது நாட்டிலேயே பெற்றுக்கொள்கிறேம். மிகுதியை வெளிநாட்டிலிருந்து பெற்றுக்கொள்கிறேம். ஆனுலும், பெற்றுக்கொள்ளும் 25 வீத தேவைக்காக எமது நாட்டுப் பொருட்களைப் பதிலாக வெளிநாட்டுக்கு அனுப்புகிறேம்.''

## சமயப்பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை பின்வரும் தேவஸ்தானங்களில் அகிலஇலங்கைப் பொதுஜன சேவைச் சங்க ஆதரவில் பிரசங்கங்கள் நடைபெறும்.

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம் மாலை 6 மணி முதல் 7 மணி வரை திருப்பூங்குடி திரு. வி. கே. ஆறுமுகம் 'அப்பூதி அடிகளார்' என்னும் பொருள்பற்றிய சங்கீத கதாப்பிரசங்கம். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயம்: கதாப்பிரசங்கியார் திரு. த, சுப்பிரமணியம் 'அமர் நீதிநாயனுர்' என்னும் பொருள்பற்றிப் பிரசங்கம். நல்லூர் கிழக்கு மூத்தவிநாயகர் ஆலயம்- பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் 'பெரியபுராணத் தொடர்ச்சி'- மாலை 7 மணி முதல் 8 மணி வரை.

## பிள்ளையார் கோவில் தீர்த்தோற்சவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அறுகம்புலம் மகாகணபதிப்பிள்ளையார் கோவில் தீர்த்தோற்சவம் திங்கட்கிழமை வெகுவிமரிசையாக நடைபெற்றது.

## வைத்தியநாதனுக்கு அஞ்சலி

பம்பலப்பிட்டி, வெள்ளி

ஈழத்திலே சைவசமய வளர்ச்சிக்கு புத்துயிர் அளித்தவரும் திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிச் சபைத்தலைவரும், அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவருமாகிய சைவப்பெரியார் சேர் கந்தையா வைத்தியநாதன் திடீரெனச் சிவபதம் அடைந்த செய்தியறிந்து அதிர்ச்சியும், ஆழ்ந்தகவலையும், ஆருத்துயரமும் அடைந்துள்ளதாக கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

அவர் சிவபதம் அடைந்த திகதியிலிருந்து ஒருவார காலத்தை துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு சகல சைவப் பெருமக்களையும், மதஸ்தாபனங்களையும் மேற்படி இந்து வாலிபர் சங்கம் வேண்டுகோள்விடுத்துள்ளது

## திருப்பணிவேலை ஆரம்பம்

உடுப்பிட்டி, வெள்ளி

கரவெட்டி கிழக்கு அத்துளு கண்ணகை அம்மன் கோவிலின் மூலஸ்தானமண்டபத்திற்கான அத்திபாரக் கல் நேற்றுநாட்டப்பட்டது. இதைத்தொடர்ந்து கோயிலின் திருப்பணி வேலைகள் நடைபெறும்.

கடந்த பல நூற்றுண்டு காலமாக கோவிலுக்கு எவ்வித கட்டடமும் இல்லாமல் இருந்தது. சென்ற வருடம் பொதுமக்களால், வழிபடும் மண்டபம் ஒன்று கட்டப்பட்டது.

## இனி என்று காண்போம்

சென்ற வாரம் இந்துமா மன்றக் கூட்டத்திற்கு தலைமைவகித்து சைவத்தைப் பற்றிபேசியவர், அதையடுத்து திரு. அ. ச. ஞானசம்பந்தன் கூட்டத்திற்கு யாழ்ப்பாணத்தில் தலைமைவகித்தவர் நல்லையம்பதியில் வதியும் முருகனை தேர் ஏறக் கண்டு தரிசித்து சென்ற சைவசெம்மல் சேர் வைத்தியநாதன் எங்கள் மத்தியில் இன்று இல்லை. எங்களை விட்டு பிரிவதற்கு முதல் நாள்கூட மன்னுர் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற கூட்டமொன்றிற்கு தலைமைதாங்கியிருக்கின்றுர்: இவரின் தொண்டு சேவை, சைவப்பணி வருங்காலத்தினருக்கு ஒரு எடுத்துக்காட்டு.

சென்ற வாரம் ஸ்தலஸ்தாபன மந்திரி மன்னுருக்கு வருகின்றுர் என்பதையிட்டு அவரை திருக்கேதீச்சரத்திலும் வரவேற்க ஒழுங்குகள் செய்திருந்தார். சேர் வைத்தியநாதன், திருக்கேதீஸ்வரத்தில் நூல் நிலைய திறப்பு விழாவொன்றும் மந்திரியினுல் நடாத்தப்பட்டது. ஆனுல் சேர் கந்தையா வைத்தியநாதன் சுகவீனமுற்றிருந்ததால் இந்தவைபவத்தில் கலந்துகொள்ள முடியவில்லை. சேர் கந்தையா வைத்தியநாதன் அந்தவைபவத்தில் கலந்துகொள்ளாததையிட்டு மந்திரி வருத்தம் தெரிவித்து, நாவலருக்குப்பின் சைவத்தைப்பேணி பாதுகாக்கத்தோன்றிய பெருந்தகை சேர் வைத்தியநாதன் என்று குறிப்பிட்டிருந்தார்.

வெள்ளிக்கிழமை சேர் வைத்தியநாதனுக்கு உடல்நிலை சிறிது கவலைக்கிடமாகயிருந்தபொழுதும்கூட கோயில் பூசைகளை கணக்கவேண்டாம் என்று கூறியிருந்தாராம். வெள்ளிக்கிழமை நிலைமை மிகவும் மோசமாகயிருந்தபொழுதும் அவரது மனைவி திருமதி வைத்தியநாதனிடம்பலவிஷயங்களைக் கூறி, 'உங்களால் இராசகோபுரத்தைக் கட்டி முடிக்கமுடியுமா' என்று கேட்டார். இறுதி மூச்சு உள்ள வரைக்கும் கோயிலின் சிந்தனையுடனே இருந்து எதற்காக தன்வாழ்நாளை அர்ப்பணித்தரோ அதற்காகவே தனதுஆவியையும்அர்ப்பணித்துஎன்றும் அகலாதவூர்அன்பைபெற்றுவிட்டார் அப்பெருந்தகை.

திருக்கேதீஸ்வரத்திலும் மன்னுரிலும், அடுத்த ஏனைய கிராமங்களிலும் இத்துக்கச் செய்தியைக் கேட்ட மக்கள் மறைந்த தலைவருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக அங்கே குவிந்த வண்ணமாய் இருந்தனர். மன்னுரிலுள்ள கடைகள் பூட்டப்பட்டன. கறுப்புக் கொடிகள் வீடுகளிலும் தெருக்களிலும் பறந்து கொண்டிருந்தன.

மந்திரி திரு. திருச்செல்வத்தை வரவேற்பதற்காக திருக்கேதீஸ்வரச் சந்தியிலிருந்து கோவில் வரை முதல் நாள் கட்டப்பட்ட தோரணங்கள் வாடி வதங்கி மறைந்த தலைவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் சின்னமாக அமைந்திருந்தன. சேர் வைத்தியநாதனின் பூதவுடல் திருக்கேதீஸ்வரத்திலிருந்து இறுதியாத்திரையாகப் பிரயாணம் செய்து கொண்டிருந்த பொழுது பொதுமக்கள் கைகூப்பி வணங்கி எப்பொழுதுதான் எங்கள் 'தலைவரை' காணப் போகின்றேம் என்ற வகையில் கண்ணீரும் கம்பலையுமாக ஏங்கித் தவித்துநின்றனர். சேர் கந்தையா வைத்தியநாதன் புரிந்த சேவைகள் அளப்பில. சேர் வைத்தியநாதன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தார். சைவமணி ஆனுர். தெய்வமணி ஆனுர். —தீசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இந்தியா யுத்தத்தை திணித்து விட்டது சரியான பதிலடி கொடுப்போம்"

## ஜனாதிபதி அயூப்கான் அறிவிப்பு

### "பாகிஸ்தானின் சவாலை எதிர்த்தே தீருவோம்"

— சாஸ்திரி





ராவல்பிண்டி, செப். 2

**இந்தியா, பாகிஸ்தான் மீது யுத்தத்தைத் திணித்திருக்கிறதென்றும், இந்தச் சவாலை ஏற்காமல் விடப்போவதில்லை என்றும் பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் நாட்டுமக்களுக்கு விடுத்த ஒலிபரப்புச்செய்தியில் கூறினார்.**

''இந்தியாவின் ஆக்கிரமிப்பை எதிர்க்க பாகிஸ்தான் தீர்மானித்துவிட்டது, இருபகுதித் துருப்புகளும் இப்போது கடும்சண்டையில் ஈடுபட்டிருக்கிறார்கள்'' என்றும் அவர் கூறினார்.

''இந்தியத் துருப்புக்கள் காஷ்மீரில் பொதுமக்களையும், பெண்களையும், குழந்தைகளையும் சுட்டுக்கொல்கிறார்கள். கிராமங்களை எரிக்கிறார்கள். ஹைதராபாத், ஜுனகாத், கோவா ஆகிய இடங்களை பலாத்காரத்தின் மூலம் பிடித்ததைப்போல் காஷ்மீரிலும் செய்ய நினைக்கிறார்கள். ஒரு தலைப்பட்சமாக எல்லைக் கோட்டைத் தாண்டி நமது நிலைகளைக் கைப்பற்றியிருக்கிறார்கள். இந்தியாவின் ஏகாதிபத்திய மனப்பான்மையை பாகிஸ்தான் இனியும் சகிக்கமுடியாது'' என்றார் அயூப்கான்.

''காஷ்மீர் மக்கள் இப்போது விடுதலைப் போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். பாகிஸ்தான் அவர்களுக்கு ஆதரவளிக்கிறது. விளைவுகளுக்கு இந்தியாவே பொறுப்பு'' என்றும் அயூப்கான் கூறினார்.

''கடந்த அக்டோபர் மாதம் திரு. சாஸ்திரியைச் சந்தித்தபோது இரு நாடுகளின் உறவுக்கும் முட்டுக்கட்டையாக இருக்கும் காஷ்மீர் பிரச்னையை விரைவில் தீர்க்கவேண்டுமென்பதை அவர் ஒப்புக்கொண்டார். பொறுமையுடன் காத்திருந்தோம். ஒன்றும் நடைபெறவில்லை.

''இந்த நெருக்கடியான நேரத்தில் பாகிஸ்தான் இரு சவால்களைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. இந்தியாவின் ஆக்கிரமிப்பு ஒன்று, காஷ்மீரின் சுயநிர்ணய உரிமை மற்றொன்று.

''மேற்குநாடுகள் அளிக்கும் பெரும் ஆயுதஉதவியை இந்தியா பாகிஸ்தானுக்கெதிராகப் பயன்படுத்துகிறதென்பது தெரிந்துவிட்டது. இக்கட்டத்தில் பாகிஸ்தான் மக்கள் ஒன்றாக எழுந்து இந்தியாவுக்கு தக்க பதிலடி கொடுப்பார்கள்'' என்றும் அயூப்கான் கூறினார்.

''சாம் பகுதியில் சண்டை இன்னும் கடுமையாக நடக்கிறது. பாகிஸ்தானியர் பெரும்பலத்துடன் வந்திருக்கிறார்கள். இந்தச் சவாலை இந்தியா சமாளித்தேதீரும். கட்டாயம் சமாளிப்போம்'' என பிரதமர் சாஸ்திரி விடுத்த அறிக்கையில் கூறியிருக்கிறார்.

''பாகிஸ்தானின் தாக்குதலை எதிர்க்க நாடு முழுதும் தயாராய் இருக்கிறது. மக்கள் எச்சரிக்கையுடனும், விழிப்புடனும் இருக்கவேண்டும்'' என்றார் சாஸ்திரி.

''பாகிஸ்தான் அதிபர் தனது அறிக்கையின்மூலம் காஷ்மீரில் தாங்கள் ஊடுருவியுள்ளதை ஒப்புக்கொண்டுவிட்டார்'' என்றும் அவர் கூறினார்.

## 'இங்கு இனப்பாகுபாடு கிடையாது'

பேர்லின், செப். 2

கானாவைச் சேர்ந்த ஐ. நா. சங்கங்களின் உலகசம்மேளனத்தின் உபதலைவர் திரு. மாமட்டா ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் இரு வாரங்கள் சுற்றுப்பிரயாணம் செய்தார்,

அவர் பத்திரிகைகளுக்கு அளித்த ஒரு பேட்டியில் சந்தோஷமாகவும் ஆரோக்கியத்துடனும் இருக்கும் ஜெர்மன் சிறுவர், சிறுமியர் தன்னைப் பெரிதும் கவர்ந்தனரென்றும் அவர்களிடம் இனப்பாகுபாடு அடியோடு கிடையாதென்றும் சர்வதேச நட்பு அவர்களுக்குப் போதிக்கப்படுகிறதென்றும் தெரிவித்தார்.

## பூனா நிலைமை

பூனா, செப். 2

பூனாவில் நிலைமை இப்போது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

## வார்சாவுக்கு பிரி. மந்திரி

லண்டன், செப். 2

பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. ஸ்டுவர்ட் இன்னும் 2 வாரங்களில் வார்சாவுக்குப் புறப்படவிருக்கிறார்.

## இந்தியாவுக்கு ரஷ்ய ஆயுதம்

மாஸ்கோ, செப். 2

ஆயுதம் பெறும் பொருட்டு ரஷ்யா சென்றிருந்த இந்திய பாதுகாப்பு தூது கோஷ்டி தாங்கள் கோரிய ஆயுதங்களை ரஷ்யாவிடமிருந்து பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு சமயத்தில் இந்தியாவின் ராணுவத் தேவையை ரஷ்யா நன்கு உணர்ந்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

## 70 டாங்கிகள் சகிதம் பாகிஸ்தானியர் தாக்கினர்

### மேலும் 3 டாங்கிகள் அழிக்கப்பட்டன

ஸ்ரீநகர், செப். 2

**பாகிஸ்தான் படையின் 2 ரெஜிமெண்டுகள், 70 பேட்டன் டாங்கிகள் சகிதம் சாம் பகுதியில் 8 மைல் ஊடுருவியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.**

இந்திய விமானப்படையைச் சேர்ந்த 28 விமானங்கள், அவர்கள்மீது தாக்குதல் நடத்தியதில் 10 டாங்கிகள் அழிக்கப்பட்டதும் பாகிஸ்தான் விமானங்களுடன் சண்டையிட்டு நான்கைச் சுட்டுவீழ்த்தின என்பதும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### 3 டாங்கிகள் நாசம்

இன்று அதிகாலை நடைபெற்ற சண்டையில் மேலும் 3 பாகிஸ்தான் டாங்கிகள் அளிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

ஹாஜிபீர் கணவாயை இந்தியத்துருப்புகள்பிடித்துவிட்டன என்பதை முதல் தடவையாக பாகிஸ்தான் இப்போது ஒப்புக்கொண்டிருக்கிறது. முன்பு இதை அவர்கள் மறுத்திருந்தனர்.

ஊரி, பூஞ்ச் வளைவில் கிழக்குப் பகுதியில் மேலும் சில பாகிஸ்தான் காவல் நிலைகளை இந்தியத் துருப்புகள் பிடித்திருக்கின்றன. இவ்விடங்களில் நடைபெற்ற சண்டையில் ஏராளமான ஆயுதங்களும், தோட்டாக்களும் பிடிபட்டன. பாகிஸ்தானியர் நேற்று இரு இடங்களில் பின்வாங்கினார்களென அறிவிக்கப்படுகிறது. டிட்வால் பகுதியில் இந்தியத் துருப்புக்கள் எல்லைக்கோட்டுக்கு அப்பால் தங்கள் நிலைகளைப் பலப்படுத்தியுள்ளன.

வடக்குப் பகுதியில் ஆயுதம் தாங்கிய பாகிஸ்தானியர்களுடன் நடைபெற்ற சண்டையில் 25 பாகிஸ்தானியர் பலியாகினர்.

### மந்திரிசபைஅவசரக்கூட்டம்

சாம் பகுதியில் ஏற்பட்டுள்ள நிலைமை பற்றி இந்திய மந்திரிசபையின் அவசரக் கூட்டம் ஆராய்ந்தது. பிரதம மந்திரி, பின்பு உயர் ராணுவ அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

தம்மை இன்று சந்திக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு திரு. சாஸ்திரி அழைப்பு விடுத்திருக்கிறார்.

### யுதாண்ட் வேண்டுகோள்

ஐ. நா. பிரதம காரியதரிசி யுதாண்ட் உடனடியாகச் சண்டை நிறுத்தம் கோரி, திரு. சாஸ்திரிக்கும் திரு. அயூப்கானுக்கும் புதிய வேண்டுகோள் ஒன்றை விடுத்திருக்கிறார்.

எந்தச் சமயத்திலும் இந்தப் போர் உலக சமாதானத்தைப் பாதிக்குமென்றும், காஷ்மீர் சிக்கலைத் தாம் முழுதும் உணர்ந்திருப்பதாயும், அதை சமாதானமாக அது தீர்க்கமுடியாததல்ல என்றே தாம் கருதுவதாயும் அவர் தனது செய்தியில் கூறியிருக்கிறார். பலாத்காரம் ஐ. நா. சாஸனத்துக்கு முற்றும் மாறானதென்றும், பிரச்னையைத் தீர்க்க இரு நாட்டுத்தலைவர்களுக்கும் தாம்முழு உதவியளிப்பதாகவும் யுதாண்ட் கூறியிருக்கிறார்.

யுதாண்ட் நேற்று ஐ. நா., அமெரிக்க, ரஷ்யப் பிரதிநிதிகளுடனும் காஷ்மீர் பற்றிப் பேசினார்.

### நிம்மோ அறிக்கை

காஷ்மீரிலுள்ள ஐ. நா. பிரதம பார்வையாளர் ஜெனரல் நிம்மோவின் அறிக்கையை யுதாண்ட், பாதுகாப்புசபை அங்கத்துவ நாடுகளுக்கு அனுப்பியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

காஷ்மீரில் 'பாகிஸ்தான் கடைசிச் சீட்டையும் ஆடிவிட்டது. அடுத்த சில நாட்கள் முக்கிய தினங்களாக இருக்கும்' என 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகை குறிப்பிடுகிறது.

அமெரிக்க ஆயுதங்கள் சீனாவுக்கு எதிராக அல்ல- இந்தியாவுக்கு எதிராகத் தானென்றும், காஷ்மீர் தான் அமெரிக்க ஆயுதங்களுக்கு அதிக முக்கிய இலக்கு என்றும் அயூப்கான் கருதுவதாக 'நியூயோர்க் போஸ்ட்' கூறுகிறது.

காஷ்மீர் சம்பந்தமாக ரஷ்யப் பிரதமர் திரு. கோஸிஜின் அயூப்கானுக்கும், சாஸ்திரிக்கும் செய்தி ஒன்றை அனுப்பியிருக்கிறார்.

## கோபாலன்

திருச்சூர், செப். 2

கம்யூனிஸ்ட் தலைவர் திரு. ஏ. கே. கோபாலன் நேற்று ஆஸ்பத்திரிலிருந்து திருச்சூர் மத்திய சிறைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

## கிரீஸ்

ஏதென்ஸ், செப். 2

கிரீஸில் விரைவில் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும் என முன்னாள் பிரதமர் பபாந்திரியோஸ்மீண்டும்வற்புறுத்தினார். நேற்று 2000 க்கதிகமானவர்கள் பொதுத் தேர்தல் நடத்துமாறு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

## 'நமது கைமாறு இதுவே'

புத்தூர், வெள்ளி

'சேர் கந்தையா வைத்தியநாதன் ஓர் உறுதிமிக்க, உரமிக்க சைவத் தமிழ்ப் பெரியாராக வாழ்ந்து வந்தார். அவரை நாம் இழந்துள்ளது பேரிழப்பாகும். பாடல் பெற்ற திருக்கேதீச்சரத்துக்கு அவர் செய்த பணி அளப்பரியது. அவர் தொடக்கி வைத்த திருக்கேதீஸ்வரப் பணியைப் பூர்த்தி செய்தலே அவருக்கு நாம் செய்யும் கைமாறாகும்'.

இவ்வித அனுதாபத் தீர்மானமொன்று ஆவரங்கால் சரஸ்வதி சனசமூகநிலையத்தின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## கூட்டுறவு வைத்தியசாலை நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, வியாழன்

ஊர்காவற்றுறை - கரம்பனில் ஸ்தாபிக்கப்பட்ட தீவுப்பகுதி கூட்டுறவு வைத்தியசாலையின் அமைப்புக் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது. பின் வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. கோபால பிள்ளை (சுருவில்), உபதலைவர்: திரு. பி. ஜே. அலோசியஸ் (கரம்பன்), காரியதரிசி: திரு. கே. இராசையா, தனாதிகாரி: திரு. எஸ். எம். அல்பிரட். தீவுப் பகுதியை பதினாறு தொகுதிகளாகப் பிரித்து தொகுதிக்கு ஒருவர் நிர்வாகசபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## மோசமான அரிசி

பளை, புதன்

பச்சிலைப்பள்ளிக்குக் கடந்த சில வாரங்களாக கூப்பனுக்கு வெள்ளை அரிசி விநியோகம் செய்யப்படுகிறது. உஷ்ண காலத்தில் இதை மக்கள் உண்பதால் பலவித வயிற்றுக்கோளாறுகளுக்கு ஆளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுவதாக அறியப்படுகிறது. இதை உண்ண முடியாது இருப்பதாகவும் தெரிகிறது. இந்த அரிசியில் உமிகள், புழுக்கூடுகள், வண்டுகள் சேர்ந்து கிடப்பதாகவும் இதுபற்றி மக்கள் பண்டசாலை மேலதிகாரிகளுக்குப் புகார் செய்யவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 115 வயதுப் பாட்டி

ஊர்காவற்றுறை, வியா.

புங்குடுதீவைச் சேர்ந்த குறிகாட்டுவான் வட்டாரத்தில் 115 வயதுடைய முதுபெரும் பாட்டி ஒருவர் வசித்து வருகிறார். தம்பையா பெண் மீனாட்சிப்பிள்ளை என்ற இந்தப்பாட்டிக்கு 13 பிள்ளைகள் இருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தீர்மானங்கள்

உடுப்பிட்டி, வியா.

இமையாணன் கிராமமுன்னேற்றச்சங்கப் பொதுநிர்வாகசபைக்கூட்டம் இமையாணன் அரசினர் பாடசாலைமண்டபத்தில் திரு. கே. டி. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது. பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

ஆசிரியை ஒருவரை நியமித்து கிராம மக்களுக்கு வெண்காயக்கூடை பின்னப் பயிற்சி கொடுப்பதென்றும், இமையாணன் பாடசாலை வீதியை சிரமதான இயக்கத்தின்மூலம் திருத்தியமைப்பதென்றும் பள்ளி மாணவர்களையும், பொது மக்களையும் இப்பணியில் ஈடுபடச்செய்வதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், வியா.

வடபிரதேச ஆசிரியர்சங்கத்தால் நடாத்தப்படும் வடபிரதேசப் பல்கலைக்கழகம் வாரவிடுமுறைப் பகல் வகுப்புகளை இம்மாதம் 4-ந் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாயவித்தியாலயத்தில் நடாத்துவதென ஆசிரியர்சங்கம் தீர்மானித்துள்ளது.

## அதிகாரம் வழங்க முடிவு

பருத்தித்துறை, வியா.

நேற்றைய தினம் நடைபெற்ற வடமராட்சி கூட்டுறவு ஐக்கிய வைத்தியசாலைச் சங்கத்தின் பொதுக் கூட்டம் திரு. ரி. இரத்தினம் தலைமையில் நடைபெற்ற போது தற்போது பிரசவப்பகுதி, டிஸ்பென்சரி ஆகியவற்றுடன் சேர்ந்து கட்ட ஆரம்பித்துள்ள வைத்தியசாலையின் முதலாவது விடுதியை குறிப்பிட்ட ஓரளவுக்குக் கட்டி முடிக்க நிர்வாக சபைக்கு அதிகாரம் வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

உதவிக் கூட்டுறவு ஆக்கத்துறைஆணையாளர் திரு. எம். மதிபாலசிங்கம் இக்கூட்டத்தில் சமுகமளித்து பல ஆலோசனைகளைக் கூறினார்.

## பெண் தற்கொலை

ஊர்காவற்றுறை, வியா.

சரவணைக் கிராமத்தில் வசிக்கும் ஆவுடையாம்புலவாசியான கந்தையா சதாசிவத்தின் மனைவி தங்கம்மா (36 வயது) கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலைசெய்துகொண்டார்.

வேலணைத்தீவு மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். மகாலிங்கம் திடீர் விசாரணை நடாத்தினார். நீண்டநேரவிசாரணையின் பின் தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## கோரிக்கை

குரும்பசிட்டி, வியாழன்

குரும்பசிட்டி நலன்புரி சபை நிர்வாகிகள் அண்மையில் காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. எம். ஸ்ரீகாந்தாவை சந்தித்து நடாத்திய பேச்சுவார்த்தையின்போது குரும்பசிட்டியில் உள்ள வற்ரு நீர் ஊற்றுக் கிணற்றில் இருந்து நீர்ப்பாசன வசதி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொண்டனர். நிரந்தரக் காரியதரிசியின் காரியாலயத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது நீர்ப்பாசனடைரக்டரும் பிரசன்னமாயிருந்தார். மேற்படி நீர்ப்பாசனத் திட்டம் அமைக்கும் வேலைகள் குறித்து அறிக்கை ஒன்றினை தமக்குச் சமர்ப்பிக்குமாறு நிரந்தரக்காரியதரிசி டைரக்டருக்கு உத்தரவிட்டார்.

## உபதலைவர் தெரிவு

யாழ்ப்பாணம், வியா.

மானிப்பாய் கிராம சபையின் உபதலைவராக சண்டிலிப்பாய் வட்டார அங்கத்தவர் திரு. எம். சுந்தரமூர்த்தி திருவுளச்சீட்டின்மூலம் தெரிவு செய்யப்பட்டார்.

மானிப்பாய் கிராம சபையின் உபதலைவர் தெரிவின் போது திரு. எம். சுந்தரமூர்த்திக்கும் அவருடன் போட்டியிட்ட திரு. ஏ. சதாசிவத்திற்கும் முறையே 6 வாக்குகள் கிடைத்தமையால் திருவுளச் சீட்டின் மூலம் உபதலைவரை தெரிவு செய்யவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது.

## கிராம சேவையாளர் மறைவுக்கு அனுதாபம்

உடுப்பிட்டி, வியாழன்

''கடமையிலே கண்ணியமும் மக்களிடம் கருணையும் கொண்டு விளங்கிய கிராம சேவையாளர் திரு ஆறுமுகத்தின் திடீர் மறைவு மிகவும் வேதனைக்குரியது. சாதி மத பாகுபாடுகள் இல்லாமல் எல்லோருக்கும் சமமான சேவைசெய்தஇவரை மக்கள் ஒருபோதும் மறக்க முடியாது என்று கரவெட்டியைச் சேர்ந்தவரும் வன்னேரி கிராமசேவையாளருமாகக் கடமையாற்றிய திரு கி. ஆறுமுகத்தின் திடீர் மறைவு குறித்து கரவெட்டி கிழக்கு வாலிபர் முன்னணியால் நடாத்தப்பட்ட அனுதாபக் கூட்டத்தில் திரு. ந. பாலசுப்பிரமணியம் பேசுகையில் குறிப்பிட்டார்.

சரஸ்வதி வித்தியாலய தலைமையாசிரியர் திரு, வி. கே. நாகராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சிவலிங்கராசா, திரு எஸ். யோகநாதன் ஆகியோரும் பேசினர்

## பெற்ற குழந்தையை கொல்ல முயன்றாராம்

காலி, வியா.

தான் பெற்ற குழந்தையைக் கொலைசெய்ய முயற்சித்தாரகக் கருதப்படும் ஒருவர் காலி பொலிஸாரினால் சந்தேகத்தின் மீது கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

காலி ரயில்வேயில் வேலைபார்க்கும் விக்டர் என்பவர் தமது மனைவியுடனும், குழந்தையுடனும் (சுமார் 2 வயது) ஜிந்தோட்டையில் இரவு வேளையில் சென்றுகொண்டிருந்த பொழுது தமது குழந்தையை கொலைசெய்ய முயன்ருர் என்றும் அப்பொழுது அவரின் மனைவி அழுது சத்தமிடவே, எதிர்பாராதவிதமாக அவ்வழியே சென்றுகொண்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் பெரேராஸ்தலத்துக்கு விரைந்து சென்று சந்தேக நபரை கைதுசெய்தாரென்றும் சொல்லப்படுகிறது

காலி மாஜிஸ்டிரேட் திரு. பி. எஸ். டபிள்யு. அபயவர்த்தன முன்னிலையில் சந்தேக நபர் ஆஜர் செய்யப்பட்டபொழுது அவரை றிமாண்டில் வைக்குமாறு மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

## சந்தேக நபர் சரணடைந்தார்

சாவகச்சேரி, வியா.

விடத்தல்பளை எஸ்டேட்டைச் சேர்ந்த சின்னத்தம்பி கந்தையா (வயது 55) என்ற காவலாளியைக் கொலை செய்தது சம்பந்தமாக இதுவரை காலமும் பொலிசாரினால் தேடப்பட்டுவந்த சந்தேக நபரான, விஞசித்தம்பி வடிவேலு நேற்றுக் காலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. பி. றுபர்ட் சில்வா முன்னிலையில் சரணடைந்தார்.

நீதிபதி எதிரியை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டு வழக்கை அடுத்த செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைத்தார். எதிரிக்காக திரு. சி. பாலகிருஷ்ணன் ஆஜரானார்.

இவ்வழக்கில் சென்ற மாதம் 21ம் தேதியன்று சி. கந்தையாவை துப்பாக்கியினால் சுட்டுக் கொலை செய்ததாக விடிவேலு மீது சாவகச்சேரி பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## அகில இலங்கை ரீதியில் இயங்கும்

யாழ்ப்பாணம், வெள்ளி

''இளம் எழுத்தாளர்சங்கம் யாழ்ப்பாணத்திலுள்ளவர்களை மட்டுமன்றி ஈழம் அடங்கிலுமுள்ள பல அங்கத்தவர்களைக்கொண்டு நேசமனப்பான்மையுடன் பலரையும் அறியும் வாய்ப்பைத் தந்தது. இந்த இளம் எழுத்தாளர்சங்கம் இவ்வளவு கட்டுக்கோப்புடன் இயங்க முக்கியஸ்தராக இருந்தவர் ஆயுர்வேத டாக்டர் எஸ். மகாலிங்கம். அவர்சேவைமகத்தானது.''

நாவலர் பாடசாலைமண்டபத்தில் யாழ். இளம் எழுத்தாளர்சங்கத்தினர், சங்கத்தின் தலைவராகவிருந்து பணியாற்றிய திரு. எஸ். மகாலிங்கம் புதிய வைத்தியசாலையொன்றை நிறுவும்பொருட்டு 'தவளந்தென்னை'க்கு செல்லுவதை முன்னிட்டு அவருக்கு அளித்த தேநீர்விருந்தின்போது திரு. தா. சண்முகநாதன் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ். இளம் எழுத்தாளர் சங்கம் அகில இலங்கை ரீதியில் இயங்கும் பொருட்டு இலங்கை எழுத்தாளர் சங்கமென்று அதன் பெயரை மாற்றுவதென கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## பிரிவுபசாரம்

சுழிபுரம், வியா.

சுழிபுரம் ஐக்கியசங்க வித்தியாசாலையில் உதவி தலைமையாசிரியராகக் கடமையாற்றி சாந்தை சிற்றம்பல வித்தியாசாலைக்கு தலைமையாசிரியராக பதவி உயர்வுபெற்று மாற்றலாகிச் செல்லும் திரு. சு. சண்முகரத்தினசர்மாவுக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியவர்களால் நடாத்தப்பட்டது. இப்பிரிவுபசார வைபவத்துக்குப் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. சி. மயில்வாகனம் தலைமை வகித்தார்.

## கமிஷன் நியமிக்கப்படும்

கொழும்பு, வியா.

பொலிஸ் சேவை பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கவென கமிஷன் ஒன்றை தான் நியமிக்கவிருப்பதாக பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா பார்லிமெண்டில் தெரிவித்தார். பாராளுமன்றப் பிரதிநிதிகள் பலர் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே இந்தக் கமிஷன் நியமிக்கப்பட விருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார். பொலிஸ் சேவையிலுள்ளவர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்படும்போது பாகுபாடு காட்டப்படுவதாக கூறப்படுகிறதென்றும், அது சரியல்ல வென்றும் சேவை மூப்பு, தகுதி ஆகுயவற்றைக் கண்டே பதவி உயர்வு வழங்கப்படுகிறது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

## சங்காபிஷேகம்

பளை, வியா,

அண்மையில் திரு. கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை என்பவரால் காசியில் இருந்து வருவிக்கப்பட்டு எழுதுமட்டுவாள் தெற்கில் அமைந்துள்ள சிவன் கோவிலுக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட லிங்கத்திற்கு சென்ற திங்கட்கிழமை சங்காபிஷேகம் நடைபெற்றது. திங்கட்கிழமை ஆரம்பமாகிய சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து பத்து தினங்களும் திருவிழா நடைபெறுகிறது. பதினேராவது தினம் தீர்த்தோற்சவம் நடைபெறும். அன்று அன்னதான வைபவத்துடன் விழா முடிவடையும்,


REGAL--JAFFNA
NOW SHOWING!
Laurence Harvey
Frank Sinatra
in
THE MANCHURIAN CANDIDATE



வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத
திருப்பணி நிதி



ஒவ்வோர் சைவ நன்மக்களாலும் வணங்கும் புதிய ரதங்களை விரைவில் உருவாக்க அடியார்களின் நன்கொடை எதிர்பார்க்கப்படுகிறது.

பணம் அனுப்பும் விலாசம்:-
தனாதிகாரி, திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை. வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.



இப்பொழுது திரையிடப்படுகிறது !
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி பிற்பகல் 2-30, 6-30, 10-30
சனி ஞாயிறு 4 காட்சிகள்
சிவாஜிகணேசன், சாவித்திரி
எஸ். எஸ் ராஜேந்திரன்
கே. ஆர். விஜயா
நடிக்கும்
கைகொடுத்த
தெய்வம்



ராஜா (யாழ்ப்பாணம்)
ஆறறிவு படைத்த மனிதன் தன்னினத்தைச் சாராதவனையே மிருகமாக்கத் துணியும் போது எழும் உரிமைக் குரல்தான்—"நானும் மனிதன்தான்"
விஜயபுரி வீரன் புகழ் ஆனந்தன்-சந்திரகாந்தா
பாண்டி செல்வராஜ், ஷீலாதேவி, அசோகன், நாகேஷ்
கண்ணன், ஓ. ஏ. கே. தேவர் நடிக்கும்
ஆனந்த மூவிஸ்
நானும் மனிதன்தான்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

1. கந்தையா சிவக்கொழுந்து, உடுப்பிட்டி
2. நாகலிங்கம் உலகநாதர் உடுப்பிட்டி

வழக்காளிகள்

இல. 8565,

எதிராக

1. சோமசுந்தரம் பொன்னம்பலம், மனைவி
2. பாக்கியவதி அம்மா டிை தற்சமயம் ஸ்ரான்லி பாடசாலை, யாழ்ப்பாணம்.
3. சுப்பிரமணியம் தில்லை நடராசா, வல்வெட்டித்துறை
4. சிவலிங்கம் சிவசண்முகதாஸ், வல்வெட்டித்துறை.
5. கந்தசாமி திருநடராசாவும் மனைவி
6. பாலேன்சனி டிை
7. முத்து சிவசுந்தரம் டிை
8. முத்து சோதிலிங்கம்
9. முத்து தங்கராசா டிை
10. இலகுப்பிள்ளை இரத்தினசிங்கம் மனைவி
11. யானகியம்மா டிை
12. துரைசாமி சின்னையாவும் மனைவி
13. தேவநாயகி டிை
14. கணபதிப்பிள்ளை பாலசிங்கம் மனைவி
15. செல்வரத்தினம் இருவரும் உடுப்பிட்டி.

எதிரிகள்

உடுப்பிட்டி இறை.

எல்லை கிழக்கு: நாகலிங்கம் உலகநாதனின் ஆதனம் வடக்கு: கடல். மேற்கு: சின்னத்தம்பி மகள் பத்தினியும் மறுபேருக்கும். தெற்கு: ரோட்டு.

என்னும் காதம்பிட்டிக்கு மேற்கு ஆதனம் என்னும் ஆதனங்களை 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தின் ஓர் பிரிவிடுதல் வழக்குத் தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக் கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1965-ம் ஞு புரட்டாதி மீ 27-ம் திகதி 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி

**A. Nadarajah.**

சக்கிடுத்தார்.

1965-ம் ஞு புரட்டாதி மீ 1-ம் திகதி. 837

## இளம்பெண் தற்கொலை

வல்வெட்டித்துறை, வியா.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கணேசமூர்த்தி பரமேஸ்வரி (வயது 16) என்பவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார். திடீர்மரண விசாரணை அதிகாரி வி. பி. இராசரத்தினம் இம் மரணம் சம்பந்தமாக விசாரணை நடத்தியபோது இறந்தவரின் சகோதரன் சொற்கேளாது இருந்துவருவதை தாங்கமுடியாமல் ஏற்பட்ட மனக்கவலைதான் தற்கொலைக்கு காரணம்எனத் தெரிவிக்கப்பட்டது.

விசாரணை முடிவில் தற்கொலை என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## NOTICE

In the District court of Point Pedro

1. Sivapiragasam Subramaniam and
2. Makeswary daughoter of Sivapiragasam of Puloly

West plaintiffs

No. 8598

VS

1. Sivapiragasam Nadarasar of co presently of 17, Raja-inge Road Wellawattai.
2. and wifeKanchanamala of du.
3. Subramaniam Thrunavukarasu & wife
4. Kamalamma alias Rajasundaram of Puloly west presently of No. 24, 36 th lane-Wellawattai.

Defendants

To:

It is hereby notified that action No 859- has been instituted in the District Court of Point Pedro under the partition act No. 26, of 1951 for partition sale ofthe land/lands called Thadithoddam and situated Puloly west Ventipahuthivan kurichy in Point Pedro Parish

The defendents in the aforessid action are summoned to appear in Court on the 15 th day of September 1965 at 10 O' clock of the forenoon

By order of Court

M. Sri Pathmanathan

This 25 day of August 1965.

82-




## கொழும்பு

### வெள்ளி 3-9-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தோத்திரப்பாடல்கள், 8-00 தேர்ந்தஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்,

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாதஸ்வரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஞானாஞ்சலி, 7-15 கதாப்பிரசங்கம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 நேயர் கேட்டவை, 10-00 புல்லாங்குழலும், கிளாரினெட்டும், 10-15 தேர்ந்தஇசை.

## திருச்சி

### வெள்ளி 3-9-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, மாலை 6-05 இரவு 7-15)

காலை 6-30 மங்களஇசை, 6-50 வாத்தியஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல்கள், 7-30 காந்தி அஞ்சலி.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-00 கல்வி ஒலிபரப்பு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 மெல்லிசை, 1-50 குரல் இசை, 2-10 கல்வி ஒலிபரப்பு, 2-20 ஆரும்வ குப்பிற்கு

மாலை 5-00 பாட்டு, 5-30 பி.பொன்னுச்சாமி சகோதரர்கள் — நாதஸ்வரம்,

இரவு 6-15 செய்திக் குறிப்புகள், 6-20 இசைப் பயிற்சி, 6-35 மெல்லிசை, 6-40 பொதுநோக்கு, 6-45 திண்ணைப்பேச்சு, 7-30 பி. பொன்னுச்சாமி சகோதரர்கள் — நாதஸ்வரம், 7-30 நம் விவசாயிகளுக்கு, 8-00 விவாக விளம்பரம் — விவாகரத்து நாடகங்கள், 8-15 இசைக்கோவை, 8-30 திரைப்படஇசை, 9-15 [illegible]

## புதுவருட நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, வியா.

ஊர்காவற்றுறை சென். யேம்ஸ் சன சமூக நிலையத்தின் உத்தியோகஸ்தர்கள் தெரிவுக்கூட்டம் திரு. சி. பிலுப்புப்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது பின்வருபவர்கள் புதிய உத்தியோகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்,

தலைவர்: திரு. சி. பிலுப்புப்பிள்ளை, உபதலைவர்: திரு. இ. எம், யோசேப், காரியதரிசி: திரு. ஏ. எவ், சிங்கராயர், தனாதிகாரி: திரு, எஸ், அந்தோனிசாமி, விளையாட்டுப்பகுதி தலைவர்: திரு. ஜே. இருதயதாசன், நிலையப்பாதுகாவலர்: திரு. ஏ. எவ், சேவியர். நிர்வாக சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

ஃ ஃ ஃ

குரும்பசிட்டி, வியாழன்

குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக்கழக ஏழாவது வருடாந்த விழா திரு. வி. பரராஜசிங்கம் தலைமையில் கிராமமுன்னேற்றச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது. பின் வருவோர் புதிய நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டன.

தலைவர்: திரு. க. குகப்பிரகாசம், உபதலைவர்: திரு. ந. சுவர்ணராஜா. இணைச்செயலாளர்: திருவாளர்கள் இ. விக்னேஸ்வரராஜா, வி. பரராஜசிங்கம், பொருளாளர்: திரு. க. ஈஸ்வரமூர்த்தி. நிர்வாக சபை உறுப்பினர்கள்: திருவாளர்கள் க. சிவதாசன், க. கடுணுமூர்த்தி, க. யோகமூர்த்தி.

## உதவ கோரிக்கை

நெடுங்கேணி, வியா.

நெடுங்கேணிப் பகுதி விவசாயிகள் இங்குநிலவும் வரட்சிகாரணமாகப் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகியிருப்பதாகவும் இதனை நிவர்த்தி செய்யுமுகமாக விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிரழிவுப் பணத்தை அவர்கள் விரைவில் பெறக்கூடிய வழிவகைகளை மேற்கொள்ளுமாறு தமிழரசுக்கட்சியின் நெடுங்கேணிக் கிளை கட்சித் தலைவரைக் கோரியுள்ளது.



## புதிய சமாதான நீதவான்

யாழ்ப்பாணம், வெள்ளி.

சித்தன்கேணியைச் சேர்ந்த இராமலிங்கம் முத்துக்குமாரு அருணசலம் புதிய சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இளைப்பாறிய அரசாங்க உத்தியோகஸ்தரான இவர் சித்தன்கேணி ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையார் ஆலய நிர்வாக சபையின் உபதலைவரும், ஆலய நிர்வாகஸ்தரும் சித்தன்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வர ஆலய பரிபாலன சபையின் உபதலைவருமாவர்.

கிராமச் சபைகள் சட்டமச் சட்டம் 17 ஆம் பிரிவின்படியான அறிவித்தல்.

என் 1475-1961 இன் 60 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம். 257) 17 (5 ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு, உள்ளூராட்சி உதவி அதிகாரி, வடபிரதேசம் (மேல்), யாழ்ப்பாணம், சிவசுப்பிரமணியம் சின்மயானந்தகுரு மாணிக்கவாசகர் ஆகிய நான், இதன் அட்டவணையின் பத்தி. I இல் குறிக்கப்பட்டுள்ள கிராமச் சபையின் கூட்டத்தை அந்த அட்டவணையின் பத்தி II இல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில் அந்த அட்டவணையின் பத்தி: III இல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் அந்த அட்டவணையின் பத்தி. IV இல் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் இத்தால் காட்டுகிறேன்.

சி. சி. மாணிக்கவாசகர்,
உள்ளூராட்சி உதவி அதிகாரி,
வடபிரதேசம் (மேல்).

யாழ்ப்பாணம்.
1965-ம் வருடம் ஒகஸ்து, 24-ம் திகதி.

| பத்தி. 1 கிராமச் சபையின் பெயர் | பத்தி. 2 திகதி. | பத்தி. 3 நேரம். | பத்தி. 4 இடம். |
|---|---|---|---|
| பண்டத்தரிப்பு. 2421 | 11-9-65. | 10-00. மு. ப. | கிராமச் சபை அலுவலகம், |

# வரி விளம்பரம்

### திருமதி சிவகாமசுந்தரி நடேசனின் ஞாபகார்த்த தினம்

நிகழும் விசுவாவசு ஆண்டு ஆவணித் திங்கள் 19-ம் நாள் (4-9-65) சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு, சென்ற ஆண்டு காலஞ்சென்ற திருமதி நடேசன் அவர்களின் ஞாபகார்த்தமாக கல்லூரி ஆலயத்தில் ஒரு விசேஷ அபிஷேகமும் பிரார்த்தனையும் நடைபெறும். கல்லூரி நண்பர்களும், பழைய மாணவிகளும் இதில் பங்குபற்றுமாறு வேண்டப்படுகின்றனர்.

அதிபரும் ஆசிரியர்களும். 974

### கல்வி

எமது மாலை நேர வகுப்புகள், பாடசாலை 3 தவணை விடுமுறை வகுப்புகளிற் சேரத்தவறியவர்களின் வேண்டுகோளின்படி புதிய வாரவிடுமுறைப் பகல் வகுப்புகள் (சனி, ஞாயிறு அல்லது புதிய திட்டப்படி 2 போயா விடுதலை நாட்களில் மாத்திரம் தொடர்ந்து நடைபெறுவது) B. A. B. Sc General & Special B. I; B. Com G. Q, G. S. Q G. C. E; A L & O L Arts & Science) பரீட்சைகளுக்கு 4-9-65-ல் வடபிரதேச பல்கலைக் கல்விக் கழகத்தில் ஆரம்பமாகும். விடுதி விஞ்ஞான ஆய்கூட வசதிகள் உண்டு. திறமையும் அனுபவமும் இலங்கைச் சர்வகலாசாலையில் விரிவுரை ஆற்றிய ஆற்றலுமிக்க ஆசிரியர்களால் எல்லாப் பாடங்களும் ஒழுங்காகப் போதிக்கப்படுகின்றன. Special Rapid Revision course covering entire Syllabus - G. C. E. (A/L & O/L Arts & science), December 965 Examination வகுப்புகளும் ஒழுங்காகநடைபெறுகின்றன. கா. க. காசிப்பிள்ளை, பொதுக்காரியதரிசி. N. R. T. A., இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம். 963

பீ. ஏ., ஜி. ஏ. கியு, பண்டித, ஜி. சி. ஈ. உயர், சாதாரணம் கலை, விஞ்ஞானம்; வர்த்தகம் தமிழ், ஆங்கிலம், சிங்களம், தபால்தந்தியாளர் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன, உடனே சேருங்கள். **யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி,** கைலாசபிள்ளையார் கோயிலடி, நல்லூர், யாழ்ப்பாணம். 965

எங்கள் ஜி. சி. இ சாதாரணம் கலை/ விஞ்ஞானம்/ வர்த்தக வகுப்புகளில் சில இடங்களே காலியாக உள்ளது. தாமதிக்காமல் சேருங்கள். யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி/ 107, பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 967

ஜி. சி. இ. உயர்தரம் கலை/ விஞ்ஞான வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி/ 107, பருத்தித்துறைவீதி. நல்லூர், யாழ்ப்பாணம். 968

### விற்பனைக்கு

வண்ணார்பண்ணை பீ. ஏ. தம்பிலேனில் நல்ல வசதியாகவும், பிரயோசனங்களுடனும் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு இருக்கிறது. விபரங்களுக்கு: M. D. பாஸ்கரன், அருணோதயா, கைதடி. என்னும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 957

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 360, 362, 364, இலக்கமுள்ள மூன்று கடைகளும், அதன் பின்னுலுள்ள இரண்டு பரப்புக் காணி (கிணறு, மலகூடம் முதலியன அமைந்தது.) உடனே விற்பனைக்கு உள்ளது. ஆ, சண்முகராசா, 222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 975

நன்கு பாவிக்கப்பட்ட நான்கு புதிய ரயர்களையும், புதிய பற்றறியையும் கொண்ட 1 ஸ்ரீA 35 கார் விற்பனைக்குண்டு. விரும்புவோர் காரியாலய நாட்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை கெஸ்டெட்னர், 50 பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் பார்வையிடலாம். 977

### தேவை

தராதரம்பெற்ற அனுபவமுள்ள மருத்துவமாது தேவை. விளம்பரஇல: 964, ஈழநாடு, மேற்பார்த்து.

964

### பிரபல சோதிடம்

சாதகப்பலன் ரூபா 3-00, ரேகைபலன் ரூபா 2-00, ஆரூடபலன் ரூபா 1-00. S. சிவகுருநாதன். 160, அரசடி ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 976

## துணிகரத் திருட்டு

வல்வெட்டித்துறை, வியா.

வல்வெட்டியில் வயோதிப மாது ஒருவரின் வீட்டில் திங்கட்கிழமை இரவு திருடன் ஒருவன் புகுந்து கழுத்திலிருந்த அட்டியலை அறுத்துக்கொண்டு ஓடிமறைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்களவு சம்பந்தமாக கம்பர்மலையைச்சேர்ந்த சங்கரன் சின்னத்தம்பி என்பவரை வல்வெட்டித்துறைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

## தேர்த்திருவிழா

ஊர்காவற்றுறை, வியா.

ஊர்காவற்றுறை கரம்பன் மேற்கு முருகமூர்த்தி ஆலயத்தில் தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற்றது. முதலாவது தடவையாக நடைபெற்ற இந்த விழாவில் அயற்கிராமங்களில் இருந்து வந்த பல நூற்றுக் கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

திரு. குல. சபாநாதன், டாக்டர் நடராசா, திரு. சரவணமுத்து ஆகியவர்களின் பெருமுயற்சியினால் இந்த ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு சமீப காலத்தில்தான் கும்பாபிஷேகம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் படையினர் டாங்கிகளால் தாக்கினர்

# பத்து டாங்கிகளை இந்திய விமானங்கள் நாசமாக்கின

## போர்நிறுத்தக் கோடுநெடுகிலும் பலத்த சண்டை

(அதிகாலை கிடைத்த செய்திகள்)

ஸ்ரீநகர், செப். 1

**சாம் பகுதியில் தாக்குதலின்போது பாகிஸ்தான் துருப்புக்கள் பயன் படுத்திய 10 டாங்கிகளை இந்திய விமானப்படை விமானங்கள் அழித்துவிட்டன.**

ஜம்மு-காஷ்மீரிலுள்ள சாம் எனும் பகுதியில், ஏராளமான பாகிஸ்தானிய துருப்புகள் டாங்கிகளுடன் படையெடுத்தனர் என்றும் போர் நிறுத்தக் கோட்டை கடந்து வந்து பெருமளவில் தாக்குதல் நடத்திய இவர்கள் மீது, 28 இந்திய விமானப்படை விமானங்கள் தாக்குதல் நடத்தி பத்து டாங்கிகளை முற்றுக நாசமாக்கி விட்டன என்றும் ஸ்ரீநகரிலிருந்து இன்று கிடைத்த கடைசி செய்திகள் அறிவித்தன.

இத்தாக்குதலில் நூற்றுக்கணக்கான பாகிஸ்தானிய துருப்புகள் கொல்லப்பட்டனர் என்றும் ஆயிரத்துக்குமதிகமான பாகிஸ்தான் துருப்புகள் யுத்த நிறுத்தக்கோடு முழுவதிலும் தாக்குதல் நடத்தி வருவதாகவும் அறிவிக்கப்பட்டன.

# 4 இந்திய விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன

## பாகிஸ்தான் அறிவிப்பு

ராவல்பிண்டி, செப் 1

**சாம் பகுதியில் யுத்த நிறுத்தக் கோட்டைக் கடந்து பாகிஸ்தானிய துருப்புக்கள்மீது தாக்குதல்கள் நடத்திய நான்கு இந்திய விமானப்படை விமானங்கள் இன்று சுட்டுவீழ்த்தப்பட்டதாக பாகிஸ்தான் உத்தியோகபூர்வமாகஅறிவித்துள்ளது.**

இந்திய விமானங்கள் பெருமளவில் தாக்குதல்கள் நடத்தி வருவதாகவும் பாகிஸ்தானிய துருப்புக்கள் டாங்கிகளை உபயோகித்து இந்த விமானங்களில் நான்கை சுட்டு வீழ்த்தியதாகவும் பாகிஸ்தானின் உத்தியோக பூர்வமான செய்திகள் கூறுகின்றன.

## யாழ்ப்பாணத்தில் இருக்க விரும்பாத நீதியரசர்!

யாழ்ப்பாணம், வியா.

''எனது சேவையிலிருந்து நான் இளைப்பாறிய காலத்தில், யாழ்ப்பாணத்தில் இருக்கக் கூடாதென பிரார்த்திக்கிறேன். குற்றஞ்செய்யாத எவராக விருந்தாலும் சரி, அவரை வழக்கினுள் புகுத்துவதற்கு கையாள வேண்டிய சகல வழி வகைகளும் ''ஊர் அப்புக்காத்து'' மார்கள் மூலமாகநடைபெற்று வருகின்றன. இங்கு குற்றம் செய்யாத நிரபராதிகளை விரைவாக குற்றவாளிகளாக்க பலர் இருக்கிறார்கள்'' என்று நெடுந்தீவு கொலை முயற்சி வழக்கின் விசாரணையில்ஒரு கட்டத்தில் நீதியரசர் ஏச் டபிள்யு. தம்பையா கியூ.ஸி. குறிப்பிட்டார்.

## சிறிமா—சாஸ்திரி

# ஒப்பந்தத்தில் சில சிக்கல்கள்!

## பார்லிமெண்டில் பிரதமர் விளக்கம்

கொழும்பு, புதன்

இன்று பார்லிமெண்டில் சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் பற்றிய சில விஷயங்களை பிரதமர் குறிப்பிட்டார். இந்த ஒப்பந்தத்தை செயல் படுத்தாமல் அப்படியே கைவிடப் போவதாகவும், ஒப்பந்தத்தின் சில ஷரத்துகளை மாற்றிவிடப் போவதாகவும் எதிர்க்கட்சியினர் கூறித் திரிவதாகக் குறிப்பிட்ட பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா மேலும் கூறியதாவது:-

''இலங்கையராக பதிவு செய்ய விரும்புகிறவர்களையும், இந்தியா செல்ல விரும்புகிறவர்களையும் தனித்தனி இடாப்புகளில் பதியவேண்டும் என்பதே ஒப்பந்தத்தின் சரத்து. எத்தனைபேர் இவ்விதம் செய்ய முன்வருவார்கள் என்பது ஒரு சிக்கலாகும்.

இதே நேரத்தில் கட்டாய நாடுகடத்தலும் ஒப்பந்தத்தில் உண்டு. விருப்பத்துக்கிணங்கவோ அல்லது பலவந்தமாகவோ ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட முழுத் தொகையினரையும் இலங்கையராக பதிவு செய்யவும், நாடுகடத்தவும் முடியுமா என்பதே முக்கிய, அடிப்படைப் பிரச்னையாகும். ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருக்கும் தொகைகளை எட்டிப்பிடிக்க இரண்டு அரசாங்கங்களும் முயற்சி எடுக்க வேண்டும். ஒப்பந்தத்தில் கணக்கிடப்பட்ட தொகையை சம்பந்தப்பட்டவர்களின் விருப்பத்துக்கிணங்க அமைந்தால் பிரச்னைவெகு சுலபமாக தீர்ந்துவிடும்.

இலங்கை - இந்தியர் ஒப்பந்தத்தை அமுல் செய்வது சம்பந்தமாக பேச்சுக்கள் நடத்த கடந்த டிசம்பர் மாதத்தில் இங்கு வந்த இந்திய தூது குழுவினர் தனி இடாப்பு ஒன்று வைப்பது குறித்து கருத்து வெளியிட்டிருந்தனர். தனிப்பட்ட வாக்காளர் இடாப்பு ஒன்றை வைத்துக்கொள்வது சம்பந்தமான பிரச்னைக்கு சரியான தீர்வு ஏற்படாத பட்சத்தில் ஒப்பந்தத்தை அமுல் செய்வதற்கு உறுதியளிக்கப்பட மாட்டாது என்று தூதுக் குழுவினர் தெரிவித்திருந்தனர். இங்குள்ள 15,000 பேரின் தலைவிதியை எப்படியும் நிர்ணயித்தே தீரவேண்டும். இலங்கை இந்த பிரச்னையை மேலும் நீடிக்க விரும்பவில்லை. எப்படியும் விரைவாக சுமுகமான தீர்வை நாம் காணவேண்டும்.

## தேர்தல்ஆயத்தம்

கொழும்பு, புதன்

டிசம்பரில் நடைபெறவிருக்கும் கொழும்பு மாநகர சபை தேர்தலுக்கான ஒழுங்குகள் யாவற்றையும் தேர்தல் இலாகா வெகு தீவிரமாக கவனித்து வருகிறது. 47 வட்டாரங்களின் தேர்தல் இடாப்புகள் இப்பொழுது வாக்காளரின் பார்வைக்கென வெளியிடப்பட்டுள்ளது.

## போட்டியின்றித் தெரிவு

யாழ்ப்பாணம், வியாழன்

மல்லாகம் கிராமச் சபையின் 11-ம் வட்டாரஇடைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் உதவித் தேர்தல் அதிகாரியால் கிராம சபையில் ஏற்றுக்கொள்ளப் பட்டபோது சின்னப்பு கனகநாயகம் போன்டியின்றித் தெரிவுசெய்ய்யட்டார்.

# நெடுந்தீவு கொலைமுயற்சிவழக்கு: இரு எதிரிகளும் விடுதலை

யாழ்ம்பாணம், வியா.

நெடுந்தீவு கொலை முயற்சி வழக்கு நேற்று பிற்பகல் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின், விசாரணையை தொடர்ந்து நடத்த விரும்பவில்லை என ஜூரி சபையினர்தெரிவித்ததைத் தொடர்ந்து, நீதியரசர் ஏச். டபிள்யு. தம்பையா கியூ.சி. எதிரிகளை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் 1963 ம் ஆண்டு ஜூலைமாதம் 18-ம் திகதி நெடுந்தீவில் ஐயம்பிள்ளை கந்தையா, நாகம்மா பொன்னம்மா, சொக்கலிங்கம் சுப்பிரமணியம் ஆகியோரை அதே இடத்தில் அதே நேரத்தில் துப்பாக்கியால் சுட்டுக்கொலைசெய்ய முயற்சித்ததாக செபமாலை சேவியர், ராமநாதர் தியாகராசா ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன், திரு. ஆர். கோபாலரத்தினத்தின்உதவியுடனும், திருவாளர்கள் ஆர். விஸ்வநாதன், எல். பால்குமார் ஆகியோரின் அனுசரணையுடனும் ஆஜரானார்.

## யாழ். மண் நீர் ஆராய்ச்சி

# மேலும் பல இஸ்ரேல் நிபுணர்கள் இங்கு வருவர்

## இஸ்ரேல் தூதர் பேட்டி

குரும்பசிட்டி, வியா

''இஸ்ரேல் நாடு இலங்கைக்கு விவசாயம், தொழில் நுட்பம் போன்ற துறைகளில் பெரிதும் உதவி செய்துவருகிறது. மேலும் இலங்கை அரசாங்கம் வீடமைப்பு, கூட்டுறவு போன்ற துறைகளில் உதவிகள் கோரும் பட்சத்தில் நமது நாடு உதவிசெய்யத் தயாராக இருக்கிறது. இலங்கையிலிருந்து பலவித தொழில்களில் ஈடுபட்டுள்ள நிபுணர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கி இஸ்ரேல் நாட்டில் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. தற்போது வருடமொன்றுக்கு 30 முதல்40 வரையிலான நிபுணர்கள் இத்திட்டத்தின் கீழ் இஸ்ரேல் நாட்டில் பயிற்சி பெறுகின்றனர், யாழ்ப்பாண மண்வளத்தைப் பற்றியும், தண்ணீர் பற்றியும் ஆராய்ச்சி செய்து அபிவிருத்தி முறைகளைக் காண்பதற்கு எமது நாட்டிலிருந்து பல நிபுணர்கள் இங்கு வந்து பரிசோதனைகள் நடத்தியுள்ளார்கள், மிக விரைவில், இலங்கை அரசாங்க அழைப்பின் பேரில் மேலும் பல நிபுணர்கள் இவ்வேலைகளில் ஈடுபட இங்கு வரவிருக்கிறார்கள்'' இவ்வாறு இலங்கையிலுள்ள இஸ்ரேல் நாட்டு தூதுவர் திரு ஜீ. ஷாஉல் றமாதி யாழ்ப்பாணம் விஜயம் செய்திருந்தபோது ஈழநாடு நிருபருக்களித்த் விசேஷ பேட்டியின் போது தெரிவித்தார்.

திரு. ஷா உல் றமாதி மேலும் தமது பேட்டியில் குறிப்பிட்டதாவது; ''எமது நாட்டின் பொருளாதார விருத்திக்கான முதுகெலும்பாக இருப்பது கூட்டுறவுத்துறையே. கூட்டுறவுத் துறை மூன்று முக்கிய பிரிவுகளாக இயங்கிவருகிறது. பொதுத்துறை, தனியார் துறை, தொழிற்சங்கத் துறை என்னும் இம் மூன்று பிரிவுகளிலும் எமது நாட்டிலுள்ள 25 லட்சம் மக்கள் தொகையில் 10 லட்சமானோர் அங்கம் வகிக்கின்றார்கள்.

எமது நாடு முழுக்க முழுக்க விவசாய நாடாகவே திகழ்கிறது. இஸ்ரேல் நாட்டு விவசாயிகள் பழமை வாதிகளாக இருந்து வருகிறார்கள். இதனால் புதுப் புது வழிகளையும் விஞ்ஞான வளர்ச்சியையும் விவசாயத் துறையில் ஈடுபடுத்த அவர்கள் முனைவதில்லை. இதனால் உற்பத்திப் பெருக்கம் குறைகிறது. அண்மையில் நமது அரசாங்கம் விவசாயத்துறையில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்த முனைந்த போது விவசாயிகளிடமிருந்து பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. இருந்தும் அத்திட்டத்தைப் பலவந்தமாக அமுல் நடத்திய போது குறுகிய கால எல்லைக்குள் உற்பத்தி ஐந்து மடங்காக அதிகரித்துள்ளது''

வடமாகாண விவசாய உற்பத்தியாளர் சங்க அழைப்பின் பேரில் புதன் கிழமை நண்பகல் யாழ்ப்பாணம் வந்துள்ள திரு. றமாதி அரசாங்க அதிபர், யாழ். மாநகரசபை முதல்வர் ஆகியோரைச் சந்திப்பதுடன் இங்குள்ள கூட்டுறவாளர் நிலையங்களுக்கு நேரில் விஜயம் செய்து பார்வையிடுவார்.

## குடும்பநலத்திட்ட

# பயிற்சி வகுப்புகள் 6-ம் திகதி ஆரம்பம்

பருத்தித்துறை, வியா.

வடமராட்சியில் சுவீடன் அரசாங்க உதவியில் நிறுவப்பட்டு இயங்கிவரும் குடும்பநலத் திட்ட அலுவலகத்தில் குடும்பநலத் திட்டப் போதனு, பயிற்சிவகுப்புக்கள் இம்மாதம் 6 ம்திகதியன்று ஆரம்பமாகவிருக்கின்றன.

முதல் இருவாரப் பயிற்சிக்கு யாழ் மாவட்டத்திலிருந்து பத்து மருத்துவமாதர்கள் தெரிவுசெய்யப்பட்டிருப்பதாயும் அடுத்த பயிற்சிக்கு பொதுசுகாதார பரிசோதகர்கள் பதின்மர் தெரிவு செய்யப்பட்டு இருப்பதாயும் தெரியவருகிறது.

பயிற்சி வகுப்புக்களை யாழ் மாவட்ட சுகாதாரத் துறை அத்தியட்சகர் டாக்டர் திரு இராசரத்தினம் தொடக்கி வைப்பார்.

# காஷ்மீரில் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சண்டை விரைவாகப் பரவியிருக்கிறதென்றும், இந்தியத்துருப்புக்கள் வீரத்துடனும், நம்பிக்கையுடனும் போராடிவருவதாய் திரு. சாவன் பின்பு குறிப்பிட்டார்.

இந்தியப் பகுதிக்குள் பாகிஸ்தானிய விமானங்கள் பறந்திருப்பதாயும், சாம் பகுதியில் பெரிய மோதல் ஏற்பட்டிருந்தபோதிலும் கவலைப்படத் தேவையில்லை என்றும் பிரதமர் கூறினார்.

வருகிற திங்கட்கிழமை எதிர்க் கட்சித்தலைவர்களையும், பிரபலஸ்தர்களையும் திரு. சாஸ்திரி சந்தித்து காஷ்மீர் பற்றிப் பேசவிருக்கிறார்,

காஷ்மீர் நிலைமை குறித்து பிரிட்டன் கவலை தெரிவித்திருக்கிறது,

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாத 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org